2006 ஆகஸ்ட் 21]

திருமதி பி. பத்மாவதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவித்திருப்பதை நான் வரவேற்பதோடு, மின்சாரம் தாக்கி இறந்தவருக்கு ரூ.25 ஆயிரம் என்றும், கால்நடைகளுக்கு ரூ.2 ஆயிரம் என்றும் அறிவித்திருக்கிறார்கள். அந்தக் கால்நடைகளுடைய மதிப்பே கிட்டத்தட்ட குறைந்தபட்சமாக எடுத்துக்கொண்டால்கூட, ஒவ்வொன்றும் ரூ.10 ஆயிரத்திற்கு மேற்பட்டதாக இருக்கிறது. எனவே, அந்த வகையில் கூடுதலான தொகையை வழங்கவேண்டும் என்றும், இறந்தவருக்கு இழப்பீட்டுத் தொகையாக ரூ. 1 இலட்சம் கருணையோடு வழங்க வேண்டுமென்றும் கேட்டு அமர்கின்றேன்.

முற்பகல் 10–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர். (குறுக்கீடுகள்) திரு. விசுவநாதன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: ஏற்கெனவே ஒரு அரசாங்கம் முடிவெடுத்து மின் கம்பி அறுந்து விழுந்தால் அதனாலே பாதிப்புக்குள்ளானவர்களுக்கு எவ்வளவு கொடுக்க வேண்டும் என்று மின் வாரியம் முடிவெடுத்து இருக்கிறதோ அந்த அடிப்படையிலேதான் மின்சார வாரியம் வழங்கிக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினருடைய வேண்டுகோளைப் பரிசீலிக்க வேண்டும் என்று அரசு முயற்சித்தாலும், ஆங்காங்கே நடைபெறுகின்ற இப்படிப்பட்ட விபத்துகள் மூலம் மின் வாரியத்திற்கு மேலும் இழப்பீடு ஏற்படாமல் இருக்க, ஏற்கெனவே அறிவித்திருக்கிற 25 ஆயிரம் ரூபாய் பணத்தை மின் வாரியம் அளிக்கும் என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

2. தகவல் கோரல்–தொடர்ச்சி

(ஆ) உறுப்பினர் திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவை நடவடிக்கைகளில் கலந்துகொள்ள அனுமதிக்கக் கோரல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் பதர் சயீத் (குறுக்கீடு) என்னம்மா? என்ன விஷயம் சொல்லுங்கள். (குறுக்கீடு) அதெல்லாம் இருக்கட்டும். விதி 121–லே என்ன இருக்கிறது என்று தெரியும். சொல்லுங்கள்.

***Tmt. BADER SAYEED:** Under Section 121, I want to raise a motion "that this House resolves to terminate and revoke the suspension of Thiru. Agri S.S. Krishnamoorthy forthwith."

HON. SPEAKER: Whether the requisition has already been given?

Tmt. BADER SAYEED: May I say this?

HON. SPEAKER: Whether this requisition has already been given?

Tmt. BADER SAYEED: May I explain this?

HON. SPEAKER: No, no. It has not been presented to me.

Tmt. BADER SAYEED: You are not permitting me to explain.

HON. SPEAKER: You please sit down. (Interruption) No, no, it has not been presented to me. It has not been presented to me, you please sit down. (Interruption) No, no, no. I won't allow. You please sit down. (Interruption) What do you mean? *நீங்கள், எதிர்க்கட்சித் துணைத் தலைவர், சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) எழுத்து மூலமாக எதுவுமே கொடுக்கவில்லை. கொடுக்காமல் அவர்கள் எப்படி இப்படி வந்து கேட்கலாம்? (குறுக்கீடு)* No, that has not been presented to me. I am not permitting you. You please sit down. *உட்காருங்கள்.* (Interruption) No, it has not been presented to me. (Interruption) No, without my knowledge you cannot raise these things. (Interruption) No, sit down. (Interruption) You give notice and then I will consider.

4. மானியக் கோரிக்கைகள், 2006–2007, விவாதமும் வாக்கெடுப்பும் – *தொடர்ச்சி*

மானியக் கோரிக்கை எண் 21 – நெடுஞ்சாலைகள் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2006–2007 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும், வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 21–நெடுஞ்சாலைத் துறை, மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,138,02,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.2,445,52,63,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.*